அன்பு பெற்றோர்களே,

நீங்கள் உங்கள் குழந்தை உங்களுடன் அதிக நாள் இருக்க போவதில்லை என்ற கடினமான செய்தியை எதிர்கொண்டு இருக்கிறீர்கள் – ஜெர்மனியில் இந்த குழந்தைகளை நாங்கள் *"sternenkinder"* என்று அழைப்போம். நீங்கள் சோகத்திலும், பல கேள்விகளுடனும் இருப்பீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய கடமைகள் நிறைய இருக்கும். உங்கள் ஆதரவுக்கும் உதவிக்கும் நிறைய மக்கள் உங்களை சூற்றி இருக்கிறார்கள் - நாங்களும் இருக்கிறோம்.

எங்கள் சேவையை நீங்கள் அணுகுவதற்கு முன், உங்களிடம் உள்ள சில கேள்விகளுக்கு பதில் சொல்ல விரும்புகிறோம்.

*"SternenkindFotografie e.V."* என்பது என்ன?

நாங்கள் ஹாம்பர்க் பகுதியில் உள்ள ஒரு இலாப நோக்கமில்லா *(Non-Profit)* மையம். நாங்கள் இந்த குட்டி *sternenkind* -களின் முதல் மற்றும் கடைசி புகைபடங்களை எடுக்க பெற்றோர்களுக்கு உதவுகிறோம்.

நீங்கள் எப்படி எங்களை தொடர்பு கொள்ளலாம்?

நீங்கள் எங்கள் தொலைபேசி எண்: *08000-116606* -ற்கு அழைக்கலாம். நீங்கள் உங்கள் தொடர்பு விபரங்களோடு ஒரு செய்தியை எங்கள் தொலைபேசியில் குடுத்தால், நாங்கள் உங்களுடன் சேர்ந்து எங்கள் புகைப்படக்காரர்/ நிழற்படக் கலைஞர் ஒருவரை உங்களை பார்க்க வருவதற்கு ஏற்பாடு செய்வோம்.

எங்களால் இப்போது உங்களை தொடர்பு கொள்ள இயலாது, நாங்கள் என்ன செய்வது?

இதில் எந்த பிரச்சனையும் இல்லை. எங்களிடம் முதலில் தொடர்பு கொள்வது யாராகவும் இருக்கலாம்: உங்கள் மருத்துவர், நர்ஸ், தோழர்கள் அல்லது உறவினர்கள்.

எங்கள் அழைப்பிற்கு பிறகு என்ன நடக்கும்?

உங்கள் அழைப்பிற்கு பின்பு நாங்கள் ஒரு நிழற்படக் கலைஞரை உங்களுக்கு ஏற்பாடு செய்வோம். உங்கள் வசதிக்கும் விருப்பதற்கும் ஏற்ற இடத்தில் புகைப்படம் எடுத்துக் கொடுப்போம்: மருத்துவமனையில்,பிறப்பு மையத்தில்,இறுதி சடங்கில் அல்லது உங்கள் வீட்டில்.

புகைப்படத்தில் மூத்த சகோதரர்களும் , சகோதரிகளும், தாத்தா பாட்டியும் இணைந்து கொள்ளலாமா?

கண்டிப்பாக. நாங்கள் உங்கள் "sternenkind" உடன் உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் சேர்த்து புகைப்படம் எடுத்துக் கொடுப்போம்.

புகைப்படத்தில் இருக்க விருப்பம் இல்லை என்றால் என்ன செய்வது?

இது முழுவதும் உங்கள் விருப்பத்தை பொருத்தது; நாங்கள் உங்கள் குழந்தையின் மதிப்புமிக்க புகைப்படங்களை எடுக்க முடியும். புகைப்படம் எடுக்கும் பொழுது உடன் இருப்பது உங்கள் விருப்பத்தை பொருத்தது.

புகைப்படம் எடுத்த பின் என்ன நடக்கும்?

நிழற்படக் கலைஞர் அவர்கள் வீட்டிற்கு சென்று உங்கள் குழந்தையின் படங்களை எடிட் செய்வார்கள். பின்பு நாங்கள் புகைப்படங்களை உங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வதற்கு உங்களை தொடர்பு கொள்வோம். இது USB மூலமாகவோ அல்லது Stream மூலமாகவோ உங்களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். மற்ற எந்த விபரங்களும் நேரடியாக நிழற்படக் கலைஞரிடம் பேசிக் கொள்ளலாம்.

இதற்கு எவ்வளவு செலவு ஆகும்?

நாங்கள் இந்த சேவையை முற்றிலும் உங்களுக்கு இலவசமாக செய்து கொடுக்கிறோம். இது USB மற்றும் பார்சல் போன்றவற்றிக்கும் சேர்த்தே.

நாங்கள் புகைப்படங்களை உடனே பார்க்க வேண்டுமா?

புகைப்படங்களை எப்பொழுது பார்ப்பது என்று முடிவு செய்வது முழுவதும் உங்கள் விருப்பத்தை பொறுத்தது. நீங்கள் உங்களிடம் அனுப்பிய புகைப்படங்களை அல்லது USB-யை ஒரு அலமாரியில் கூட வைத்துக் கொள்ளலாம். உங்களுக்கு புகைப்படங்களை பார்க்க வேண்டும் என்று தோன்றும் பொழுது வெளியே எடுத்து பார்த்துக் கொள்ளலாம். உங்கள் "sternenkind"-ன் நினைவுகள் எப்பொழுதும் உங்கள் கைதூரத்தில் இருக்கும்.

வேறேதும் கேள்விகள் இருந்தால் தயக்கம் இன்றி எங்களை தொடர்பு கொள்ளவும். நாங்கள் உங்களுக்காக இருக்கிறோம்!

*08000-116606*